திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, நான் ஆதாரத்தோடு அறிக்கை கொடுக்கலாம் என்றிருக்கிறேன். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகத்தான் நான் சொல்கிறேன் . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படியானால் பேரவைத் தலைவர் அவர்கள் தங்களுக்கு விடுத்திருக்கிற அறிவிப்புப்படி நோட்டீஸுக்கு மன்றத்தின்முன் ஆதாரங்களைக் கொடுக்கப் போவதில்லையா? அறிக்கை மட்டும்தான் கொடுக்கப் போகிறீர்களா?

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, எந்த விஷயத்தை எழுப்பினாலும் நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அறிக்கை கொடுப்பதற்கு நான் குறுக்கே நிற்கவில்லை. நான் சொல்வது என்னவென்றால், 81-வது விதியின்கீழ் எந்த அளவிற்கு வரும் என்பதைப் பார்த்து, பேரவைத் தலைவரின் அனுமதி பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதுதான். அதற்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

இரண்டாவதாக, 'எவ்வளவோ காரியங்கள் நடைபெறுகின்றன. இதில் பேரவைத் தலைவர் அக்கறை காட்டுவதற்கு நன்றி' என்று சொல்லியிருக்கிறார். எவ்வளவோ காரியங்கள் நடைபெறுகின்றன. இந்த அவையின் கண்ணியத்தைக் காப்பாற்றுகிற பேரவைத் தலைவர் கொஞ்சம் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொண்டார் என்பது தவறு. இப்படிக் கூறுவது தவறு. இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் எழுந்திருந்து, ஏதாவது ஒரு குற்றச்சாட்டைச் சொல்லிவிட்டு, அதை நிரூபிக்க ஏதாவது என்குயரி வையுங்கள், கமிஷன் வையுங்கள் என்று சொல்கிற நிலைமை இருக்கிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(4) அறிவிப்புகள்.

(அ) திரு. ரா. ராமச்சந்திர துரை உள்ளாட்சித்துறை அமைச்சர் மீது சாட்டிய குற்றச்சாட்டு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொரு செய்தி. திரு. ராமச்சந்திர துரை அவர்கள் பேசிய நேரத்தில் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் மீது, நாமக்கல் கல்லூரிக்காக நன்கொடை வசூலிப்பதைப் பற்றியது அந்தக் குற்றச்சாட்டு. குற்றச்சாட்டிற்கான ஆதாரம் அவர்களிடம் இருக்கிறது என்று உறுப்பினர் கூறியிருக்கிறார். நான் ஒரு தீர்ப்புக் கூறுகிறேன் என்று சொல்லியிருக்கிறேன்.

1970 மார்ச் 12]

குற்றச்சாட்டிற்கான ஆதாரங்களைத் தருமாறு திரு. ராமச்சந்திர துரைக்கும், குற்றச்சாட்டை மறுப்பதற்கான ஆதாரங்கள் என்ன என்று உள்ளாட்சித் துறை அமைச்சருக்கும் எழுத இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(5) நடைமுறைக் கேள்வி.

பேரவை நடவடிக்கைகள்பற்றிய செய்திகள் வெளியிடுவது குறித்துப் பத்திரிகையாளருக்கு முதலமைச்சர் விடுத்த வேண்டுகோள்.

DR. H. V. HANDE: Sir, under Rule 83 sub-rule (3) I raise a point of order whether the Chief Minister is competent to give instructions to the Press, which is the Fourth Estate and which has the freedom to publish what it wants. In fact we are very much aggrieved because there are so many papers in Madras City which do not publish our points of view at all. It is a specific and very serious point of order. There are so many papers which do not publish whatever we say and they publish whatever the other persons say. Supposing there is an argument between me and another member, my argument is not published and the other member 's argument is published.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பத்திரிகைக்காரர்களுக்கு இப்படிப்பட்ட எச்சரிக்கை விடுவதற்கு உரிமை இருக்கிறதா?' என்பதுதானே உங்களுடைய கேள்வி? மற்ற விளக்கங்கள் தேவையில்லை.

DR. H. V. HANDE: I am making out a clear point of order. Am I not entitled even a couple of minutes to make out the point of order? I am trying to convince the Speaker that there is a specific point of order.

Then I never warned those papers. Similarly a Member in this House has no business or right or authority to instruct the newspapers. It is the fundamental right of the newspapers to publish in any manner without going against the rules. When there is justification for this feeling, we have also the same justification for our feeling because our points of view are not published. Is there any rule in the Rules Book which authorises the Speaker to give instructions to the Fourth Estate which has to maintain its freedom? Neither the President nor the Prime Minister of India has power to instruct the Press.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் எந்தப் பத்திரிகைக்கும் எச்சரிக்கை விடவில்லை. பத்திரிகைக்காரர்களைப் பொறுத்தவரையில் டாக்டர் ஹாண்டே அவர்களுக்குத் தெரிந்ததைவிட எனக்கு நன்றாகத் தெரியும். தனக்குத்தான் எல்லா விஷயங்களும் தெரியும் என்று அவர் பேசுவது முறை அல்ல. நான் பேரவைத் தலைவர் மூலமாகப் பத்திரிகையாளர்களுக்குத் தெரியப்